# உலகத்தாரல்ல

## நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல (யோ 17:14)




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இதே வார்த்தையை மறுபடியுமாக **யோ 17:16** ஆம் வசனத்திலும் கூறுகிறார். ஆண்டவர் இரண்டு முறை அழுத்தமாக கூறுவதிலிருந்து இது மிகவும் முக்கியமானதொன்று என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். ஆனால் 90% மேலான கிறிஸ்தவ விசுவாசிகள் இந்த வார்த்தையை பற்றி சிறிதும் சிந்தியாமல் இவ்வுலகத்தோடே போராடி கொண்டிருக்கின்றனர். இவ்வுலகத்தில் இருக்கும் வரை நமக்கு போராட்டம் உண்டுதான். ஆனால் அதன் நடுவிலும் தேவன் எதற்காக நம்மை இவ்வுலகத்தில் வைத்திருக்கிறார் என்ற நோக்கத்தை அறிந்து, அதை நிறைவேற்ற பிரயாசப்படுவது முக்கியமானதாகும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் இதையே செய்தார். எனவேதான், **"நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்." (யோ 17:15)** என்று ஜெபித்தார். தேவன் நமக்கு வைத்திருக்கும் இலக்கை அடையும்வரை அல்லது நம்மூலமாய் இவ்வுலகத்தில் செய்ய வேண்டிய காரியங்களை செய்துமுடிக்கும் வரை, எந்த போராட்டம் வந்தாலும், உலகமே எதிர்த்தாலும், அவற்றை

தேவபெலத்தோடு சகித்து, ஜெயித்து நம் வேலையை முடித்தவர்களாய் இவ்வுலகத்தை விட்டு கடந்து போகுதல் வேண்டும்.

எனவேதான் தேவ நோக்கத்தை அறிந்த தேவபிள்ளைகள் தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் எவ்வாறு தேவ நோக்கம் நிறைவேற பிரயோஜனப்படுத்த வேண்டும் என்பதில் கரிசனையாய் இருப்பார்கள். சுறுசுறுப்பாய் செயல்பட்டு காலத்தை பிரயோஜனப்படுத்தி கொள்வார்கள். உலகத்தால் தங்களை கறைப்படுத்தி கொள்ளமாட்டார்கள். உலகத்தில் இருந்து எதையும் எதிர்ப்பார்க்காமல், பரத்தில் இருந்தே சகலத்தையும் பெற்றுக்கொள்வார்கள். தங்கள் வாழ்வின் சூழ்நிலைகளை குறித்தோ, சமுதாயத்தில், அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தோ கவலைப்படாமல், தங்கள் எஜமானனாகிய ஆண்டவருக்கே ஊழியம் செய்வார்கள்.

ஆதி அப்போஸ்தல காலத்தில், எவ்வளவோ உபத்திரவம் வந்தபோதிலும், அரசாங்கமே அவர்களுக்கு எதிர்த்து நின்றபோதிலும், அநேகமுறை உலக அரசாங்கத்தால் தண்டிக்கப்பட்ட போதிலும், சொந்த ஜனங்களாலேயே பகைக்கப்பட்டபோதிலும், பலர் இரத்தசாட்சிகளாய் தங்கள் கண்களுக்கு முன் ஜீவனை விட்ட போதிலும், அவர்களை அது எதுவும் செய்யமுடியவில்லை. எந்த போராட்டத்தின் மத்தியிலும் தேவ நோக்கத்தை நிறைவேற்ற உலகத்தில் போராட ஆயத்தமாயிருந்தனர். ஆனால் உலக காரியங்களோடு அவர்கள் போராடி கொண்டிருக்கவில்லை. அதே நேரத்தில் எந்த நேரத்திலும் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லவும் அவர்கள் ஆயத்தமாயிருந்தனர்.

அவர்கள் பார்வையில் அழிவை நோக்கி போய் கொண்டிருக்கும் இந்த உலகத்திற்கு, நியாயதீர்ப்பின் நாள் வரும் முன்பாக, கிறிஸ்துவானவர் மத்திய ஆகாயத்தில் நம்மை அழைக்க வரும் முன்பாக, எவ்வளவு நபரை ஆதாயப்படுத்த முடியுமோ, ஆயத்தப்படுத்த முடியுமோ அவ்வளவு நபரை ஆயத்தப்படுத்தி, அவர்களை கிறிஸ்துவினிடத்தில் நடத்தி, இவ்வுலகத்தின் நியாயத்தீர்ப்புக்கு தப்பி கிறிஸ்துவை அடைய வேண்டும் என்பதே ஒரே நோக்கமாக இருந்தது.

இன்று வாழும் நம்முடைய நோக்கமும் இதுவாகவே இருக்க வேண்டும். ஆனால் இன்று நடைபெறும் ஊழியங்கள் பல விசுவாசிகளை உலகத்தின் காரியங்களை குறித்தே சிந்திக்க வைக்கின்றன. அவற்றிற்கு விடைதேடி திரிந்தே பலர் நேரத்தை வீணடித்து கொண்டிருக்கிறார்கள். குடும்பத்தில், சமுதாயத்தில் நடைபெறும் மாற்றங்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தேவ நோக்கத்திற்கு விரோதமாய் உலக அரசாங்கங்கள் கொண்டு வரும் சட்டங்களை எண்ணி கலங்குகின்றனர். இன்னும் சிலர், உலகத்தின்

ஆசாபாசங்களுக்கும், ஐசுவரியத்திற்கும், சுகபோகத்திற்கும் தங்களை விற்று போட்டுள்ளனர். இவர்கள் ஆண்டவருக்கும் ஊழியம் செய்ய விரும்புகிறார்கள், உலகத்திற்கும் ஊழியம் செய்ய நினைக்கிறார்கள். ஆண்டவரையும் திருப்திபடுத்த நினைக்கின்றனர், சிலர் அரசியல் தலைவர்களையும் திருப்திபடுத்த நினைக்கின்றனர். ஆனால் வேதம் கூறுகிறது **"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது." (மத் 6:24).** இது அனலுமின்றி, குளிருமின்றி வாழும் வாழ்க்கையாகும்.

**1 யோ 2:15 தெளிவாக கூறுகிறது "உலகத்திலும் உலகத்திலுள்ளவை - களிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை."** என்று. சிலர் உலகத்தால் கறைபடாதபடிக்கு துறவிகள் போல் வாழ முற்படுகின்றனர். ஆனால் ஆண்டவர் நமக்கு இதை கற்றுக் கொடுக்கவில்லை. ஆண்டவர் சொன்னதெல்லாம் நீங்கள் பூமிக்கு உப்பாய், உலகத்துக்கு வெளிச்சமாய் இருக்க வேண்டும் என்பதே **(மத் 5:13,14).** தேவன் நமக்கு கொடுத்திற்கும் குடும்பம், வேலை ஆகிய இவற்றை சிறப்புடன் கையாண்டு அதன் மூலம் நம் குடும்பதாருக்கும், மற்றவர்களுக்கும் கிறிஸ்துவை பிரதிபலிப்பவராய் காணப்பட வேண்டும். நாம் ஆண்டவருக்காக செய்யும் ஊழியங்கள் ஒருபுறம் இருந்தாலும், நம் வாழ்க்கை முறையே பலர் ஆண்டவரிடம் வர தூண்டுதலாய் இருக்க வேண்டும்.

ஆனால் சபையின் மூலமாய் உலகம் கலக்கப்படுவதற்கு பதிலாக, உலகத்தால் சபை கலங்கி நிற்கிறது. பண ஆசைகளும், பதவி ஆசைகளும் பல நல்ல ஆவிக்குரிய சபைகளை சிதைத்து போட்டுள்ளது. மேலும் **1 யோ 2:16,17 வசனங்கள் கூறுகிறபடி "ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்."** இன்று மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் கிறிஸ்தவ குடும்பங்களை சீரழித்து கொண்டிருக்கிறது. எனவே இதற்கு எதிராகவும் நாம் போராட வேண்டியுள்ளது.

தண்ணீரில் இருக்கும் தாமரையாய், பூமியில் இருந்தும் உலகத்தார் அல்லாதவராய் நாம் வாழும் பொழுது **“இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.“**

**(1 கொ 15:51-54)** ஆமென், அல்லேலூயா.